**ரணவிரு சேவா அதிகார சபை - 2022**
---------------------------------------------------------

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

ரணவிரு சேவா அதிகார சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, அகல்விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தின் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, ரணவிரு சேவ அதிகார சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகார சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகார சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை

எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் கூட்டுத்தாபனம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகார சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- அதிகார சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகார சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகார சபையின் ஆளுகை சபையினால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகார சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

| | உரிய நியமங்களுடன் தொடர்பு மற்றும் இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2019 ஆண்டில் உறுதிப்படுத்தப்பட்டவாறு கொடுப்பனவு மேற்கொள்வதற்காக இனங்காணப்பட்ட 3917 கணக்குகள் நடைமுறையாண்டு இறுதியில் உள்ளவாறு பெற்றோர் அடைக்கள கொடுப்பனவு பெற்றுக் கொள்ளும் 1800 கணக்குகள் காணப்பட்டதுடன் அது தொடர்பாக இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 1 இல் 129(ஈ) (I) இன் படி தேவையான வெளிப்படுத்தல்கள் மேற்கொண்டிருக்கவில்லை. | இப் பொறுப்பு 2023 ஆண்டு முதல் நிகழத்தகு பொறுப்பு என வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கும் படி உரிய அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களில் அறுதியாக காட்டப்பட்டுள்ள அறிவுரைகளுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ii) | 2011 ஆண்டின் போது அதிகார சபையிலிருந்து விலகிய கணினி உதவியாளர்கள் பெண் உத்தியோகத்தரிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 530,380 இற்கான தொகையினை அறவீடு செய்வதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஊடாக வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன் அது தொடர்பாக பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 08 இல் பின்னிணைப்பு (ஆ) இன் படி தேவையான வெளிப்படுத்தல்கள் மேற்கொண்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாதவாறு செயற்பட வேண்டுமென உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களில் அறுதியாக காட்டப்பட்டுள்ள அறிவுரைகளுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (iii) | பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 7 இன் 13 ஆம் பந்தியின் படி ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் அவற்றின் சமமான தன்மையுள்ள அல்லது செயற்பாடுகள் சமமாகவுள்ள அடிப்படையாகக் கொண்டு தொகுதிகளாக்கப்பட்டு காட்டப்பட வேண்டியிருந்த போதிலும் காணிகள் மற்றும் கட்டிடங்கள் ஆதனங்கள் பொறித்தொகுதிகளில் இருந்து வேறாக்கி இனங்காணப்பட்டிருந்தது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களில் அறுதியாக காட்டப்பட்டுள்ள அறிவுரைகளுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | நிதிக்கூற்றுக்களில் திறைசேரி உண்டியல்கள் மூலம் வட்டி வருமானம் ரூபா 5,372,849 தொகையாக இனங்காணப்பட்டிருந்த போதிலும் திறைசேரி உண்டியல் மீது குறிப்பிடப்பட்டுள்ள வட்டி சதவீதத்தின் படி கணிக்கப்பட்ட போது அதன் உண்மையான வட்டிப் பெறுமதி ரூபா 3,770,210 தொகையாக காணப்பட்டமையால் 2022 ஆண்டில் திறைசேரி உண்டியல்கள் முதலீட்டு வருமானம் மற்றும் முதலீட்டு சொத்துக்கள் ரூபா 1,602,639 தொகையினால் மிகையாக காட்டப்பட்டிருந்தது. | இந்த குறைபாடு 2023 ஆண்டில் விரைவாக சரிசெய்வதற்கும் எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாதவாறு நடவடிக்கை எடுக்கும் படி உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுருத்தப்பட்டது. | சரியாக கணிக்கப்பட்ட வட்டித் தொகையினை கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ii) | அதிகார சபையினால் 2022 ஜுன் 29 திகதி முதல் நிலையான வைப்புக் கணக்கொன்று மக்கள் வங்கியில் ஆரம்பித்து பேணப்படுவதுடன் அதில் வைப்பு வட்டி வருமானம் கணிக்கும் போது ரூபா 396,364 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன் படி பெற வேண்டிய வட்டி ரூபா 396,364 தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட சரிசெய்தல்கள் 2023 ஆண்டில் மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிப்பதுடன் இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாதவாறு செயற்படுமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுருத்தப்பட்டது. | ஆண்டிற்கான வட்டி வருமானம் சரியாக கணிக்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| விடயம் | தொகை ரூபா | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வுச் சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| நாட்குறிப்பு உறுதிச் சீட்டுக்கள் இன்மை | 56,255,315 | கூட்டுத்தொகை ரூபா 56,255,315 இற்கான நாட்குறிப்பு பதிவுகளின் உண்மைத் தன்மை தொடர்பாக நாட்குறிப்பு உறுதிச்சீட்டு ஒன்றின் மூலம் கணக்காளரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டியதுடன் | 2023 ஆண்டு முதல் நாட்குறிப்பு பதிவுகளுக்காக நாட்குறிப்பு உறுதிச் சீட்டுக்கள் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட பின்னர் கணக்கீட்டு அலுவல்கள் மேற்கொள்ளுமாறு குறிப்பிட்ட உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. | நாட்குறிப்பு பதிவுகளுக்காக நாட்குறிப்பு உறுதிச் சீட்டுக்கள் தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக் கொள்ள வேண்டும். |

நாட்குறிப்பு உறுதிச் சீட்டுக்கள் தயாரித்திருக்காத காரணத்தினால் அச் சான்றுபடுத்தல்கள் மேற்கொண்டிருக்கவில்லை.

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 முற்பணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2014 ஆண்டில் உத்தியோகத்தர் இருவரினால் பெற்றுக் கொள்ளப்பட்ட ரூபா 1,830,450 இற்கான முற்பணத் தொகை மீளாய்வாண்டு இறுதி வரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. அதற்காக குறிப்பிட்ட உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு அந்த இருவரும் சுற்றவாளிகளாக காணப்பட்டமையால் இக் கொடுப்பனவு தொடர்பாக பொறுப்பு சொல்ல வேண்டிய ஆட்களை இனங்கண்டிருக்கவில்லை. | மீண்டும் ஒழுக்காற்று விசாரணை ஒன்று நடாத்துமாறு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சுச் செயலாளரினால் அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் படி இரண்டாவது தடவை ஒழுக்காற்று விசாரணை ஒன்று நடாத்தி உரிய அறிக்கை 2023.01.26 திகதி முகாமைத்துவ சபைக்கு சமர்ப்பித்திருந்ததுடன் அதனை மீண்டும் அறவீடு செய்வதற்கு பொருத்தமான செய்முறை ஒன்று பரிந்துரைக்கப்பட்டிருக்கவில்லை. அதே போல் இந்த முற்பணங்கள் வழங்குவதற்கு உரிய கோப்பு இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளும் விசாரணைக்கு அனுப்பப்பட்டுள்ளது. | அறவிப்பட வேண்டிக் காணப்பட்ட தொகைக்காக பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களை இனங்கண்டு விரைவாக பணம் அறவீடு செய்யப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| அரச தொழில் முயற்சி திணைக்களத்தின் PED/12 இலக்கங் கொண்ட சுற்றறிக்கையின் பிரிவு 9.12 | அரச தொழில் முயற்சி திணைக்களத்தின் அங்கீகாரம் ஒன்றினை பெற்றுக் கொள்ளாமல் அக்கிரஹார காப்புறுதி தவணையின் பாதியளவு செலவுப் பொறுப்பு என ரூபா 131,000 தொகை அதிகார சபையினால் செலவிடப்பட்டிருந்தது. | முகாமைத்துவ சபையினால் அங்கீகரிக்கப்பட்டமையால் 50% தொகை அதிகார சபையினால் செலுத்தப்பட்டு இருந்தது. அரச தொழில் முயற்சி திணைக்களத்தினால் இருந்து அதற்கான அங்கீகாரம் வழங்க முடியாது என 2022 மே மாதத்தில் அறிவிக்கப்பட்டதுடன் அந்த மாதம் முதல் அதிகார | கொடுப்பனவு மேற்கொள்ள முன்னர் தேவையான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | | சபையினால் இந்த கொடுப்பனவு நிறுத்தப்பட்டிருந்தது. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 121,972,695 தொகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 19,846,298 தொகையாக இருந்தது. அதன் படி நிதி விளைவுகளில் ரூபா 102,126,397 இற்கான முன்னேற்றம் ஒன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மொத்த வருமானம் ரூபா 55,268,071 இனால் குறைவடைவதை விட மற்றும் மொத்தச் செலவு ரூபா 157,394,469 தொகையினால் குறைவடைதல் இந்த முன்னேற்றத்துக்கு காரணமாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவத் திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | ஆயுதப் படைகளில் மற்றும் பொலிஸில் இராணுவ நடவடிக்கைளின் போது ஊனமுற்ற, இறந்த அல்லது கண்டுபிடிக்க முடியாத நபர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தில் தங்கி வாழ்பவர்களின் நலனோம்பினை மேம்படுத்தும் குறிக்கோளுடன் அதிகார சபை நிறுவப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டு இறுதிவரை ஊனமுற்ற, காணாமல் போன மற்றும் இறந்த அல்லது அவர்களின் தங்கி வாழ்பவர்கள் தொடர்பாக முறையான மற்றும் சரியான தகவல் முறைமை ஒன்று நாளதுவரை ஆக்கப்பட்டு பேணிச் செல்வதற்கு அதிகார சபைக்கு முடியாமல் இருந்தது. | ரணவிரு சேவா அதிகார சபையினால் தற்போது நிர்மாணிக்கப்பட்டுள்ள தர முறைமை மூன்று கட்டங்களின் கீழ் செயற்படுத்தப்படுகின்றது.<br><br>முதலாம் கட்டத்தின் கீழ் இராணுவ நடவடிக்கைகளின் போது இறந்த, காணாமல் போன மற்றும் சுயவிபரத் தரவுகள் நாளதுவரை ஆக்கப்படும்.<br>இரண்டாம் கட்டத்தின் கீழ் யுத்த நடவடிக்கைகளின் போது இறந்த, காணாமல் போன மற்றும் ஊனமுற்ற யுத்த வீரர்களின் தங்கிவாழ்பவர்கள் தொடர்பான தகவல்கள் மாவட்ட உத்தியோகத்தர்களினால் தர முறைமைக்கு உட்படுத்தப்பட்டு காணப்பட்ட போதிலும் பேணப்படுகின்றது என அறிவிக்கின்றேன்.<br>மூன்றாம் கட்டத்தின் கீழ் இலக்காகிய நலன்பெறுவோருக்கு ரணவிரு சேவா அதிகார சபையினால் ஒவ்வொரு சேவைகளின் நலன்புரி பிரிவுகளின் மூலம் வழங்கிய/ வழங்கப்படுகின்ற நலன்கள் உட்படுத்தப்பட்டு காணப்படுகின்றது என அறிவிக்கின்றேன். | தகவல் முறைமை சரியாக மற்றும் நாளதுவரை ஆக்கப்பட்டு பேணிச் செல்ல வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 2014 ஆண்டின் போது அதிகார சபையின் தலைமை அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட க்ளெடின் பொருத்துவதற்காக டீ.சீ.ஐ. (T.C.I ENTERPRISES PVT LTD) நிறுவனத்தினால் தடுத்து வைக்கப்பட்டிருந்த ரூபா 224,063 இற்கான தொகை நடைமுறை ஆண்டு இறுதிவரை விடுவிக்கப்பட்டு இருக்காததுடன், 2014 ஆண்டில் ரூபா 4,481,269 தொகைக்கான அந்தக் கொடுக்கல் வாங்கல்களின் முறைகேடுகள் தொடர்பாக விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக விசாரணை மேற்கொள்வதற்காக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. 2022 ஆண்டு இறுதி வரை இந்த ஒப்பந்த வேலைக்குரிய விசாரணை அலுவல்கள் பூர்த்தி செய்யப்படாமையால் குறிப்பிட்ட தடுத்து வைத்தல் பணம் செலுத்த வேண்டிய தொகை என நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளது. | முறைகேடுகள் தொடர்பாக விரைவாக விசாரணை செய்து நட்டமடைதலை குறைத்துக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) | தேசிய லொத்தர் சபையின் சுபிரி வாசனா சம்பத மற்றும் ஹந்தஹன லொத்தர் வருமானத்திலிருந்து 2022 ஆண்டிற்குரிய அதிகார சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானம் ரூபா 129,826,112 தொகை எனினும் திறைசேரியின் செயற்பாட்டுத் திணைக்களத்தின் மூலம் அதிகார சபைக்கு 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 10,193,960 தொகை மாத்திரமே கிடைத்திருந்தது. அதன் படி ரூபா 119,632,152 தொகை பெற வேண்டிக் காணப்பட்டது. | திறைசேரியின் செயற்பாட்டுத் திணைக்களம் 2022 ஆண்டு முதல் உரிய முறையில் பணம் விடுவித்திருக்கவில்லை. இது தொடர்பாக பல சந்தர்ப்பங்களில் அதிகார சபையினால் திறைசேரியின் செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு விண்ணப்பித்திருந்த போதிலும் குறிப்பிட்ட பணம் உரிய முறையில் விடுவிக்கப்படாமையால் அதிகார சபையின் செயற்திட்ட அலுவல்கள் தொடர்ச்சியாக மற்றும் செயற்திறனுடன் நடாத்திச் செய்வதற்கு முடியாமல் இருந்தது என அறிவிக்கின்றேன். | பெற வேண்டிய வருமானம் விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iv) | மீளாய்வாண்டின் போது ஊனமுற்ற படைவீரருக்கு மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு பல்வேறு அறுவை சிகிச்சைகளுக்காக மருத்துவ உதவி என ரூபா 1,870,770 இற்கான தொகையொன்று 18 பேருக்கு செலுத்தப்பட்டிருந்தது. இந்த உதவித் தொகை மருத்துவ உதவி வழங்கும் நிறுவனத்திற்கு செலுத்தும் செய்முறை ஒன்றின்றி குறிப்பிட்ட நபர்களுக்கே நேரடியாக வழங்கப்பட்டிருந்தது. தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்காமையால் | 2023 ஆண்டு முதல் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் அறுவை சிகிக்கைளுக்காக பணம் வழங்கும் போது அதிகார சபையினால் வழங்கப்படும் உதவிநிதி நேரடியாக உரிய நிறுவனத்திற்கு காசோலை ஒன்றின் மூலம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். அதே போல் அதிகார சபையினால் வழங்கப்படும் அனைத்து நலன்கள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்வதற்கு | மருத்துவ வசதிகளுக்காக வழங்கியிருந்த பணம் குறிப்பிட்ட குறிக்கோளுக்காக பயன்படுத்தப்பட்டது என உறுதிப்படுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| செலுத்தப்பட்ட பணம் குறிப்பிட்ட கருமத்திற்காக பயன்படுத்தப்பட்டது என கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியவில்லை. | குறிப்பிட்ட உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது என அறிவிக்கின்றேன். | |

**3.2 செயற்பாட்டுத் திறைமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2017 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட அதிகார சபை மற்றும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையும் ஒன்றிணைந்து செயற்படுத்தப்பட்ட விருசுமிதுரு வீடமைப்புத் செயற்திட்டத்தின் கீழ் 1950 முழுமையான வீடுகளும் 1700 பாதியளவு வீடுகளும் வேலைகளை பூர்த்தி செய்வதற்காக ரூபா 3192 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. 2019 ஆண்டில் வேலைகள் பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் 2022 ஆண்டு வரை நீடிக்கப்பட்டு இருந்ததுடன் 2022 திசெம்பர் 31 திகதியளவில் மொத்த செயற்திட்டச் செலவில் ரூபா 1035.1 மில்லியன் தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டு இருந்தது. செயற்திட்டத்தின் ஒரு தவணைப் பணம் அல்லது கொடுப்பனவு ஆரம்பிக்கப்பட்டுள்ள முழுமையான வீடுகள் 1496 ஆகும். அதன் படி மீளாய்வாண்டு இறுதியளவிலும் எதிர்பார்த்த வீடு இலக்குகளில் 40 சதவீதம் மாத்திரம் பாதியளவு மற்றும் முழுமையாக உதவி வழங்கப்பட்டிருந்த நலன்பெறுவோர் எண்ணிக்கை 550 ஆகக் காணப்பட்டமையால் அது மொத்த செயற்திட்டத்தின் 15 சதவீதமாகும். மேலும் 2019 ஆண்டில் செயற்திட்டத்தின் ஆரம்பத்தில் உதவிபெறுவர் 6 பேருக்கு வழங்கியிருந்த ரூபா 865,000 இற்கான தொகையொன்று பல்வேறு சிக்கல் தன்மை காணப்பட்டமையால் மீண்டும் அதனை அறவீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2022 திசெம்பர் 31 திகதி அளவிலும் அறவீடு செய்திருக்கவில்லை. | தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் விருசுமிதுரு வீடமைப்பு செயற்திட்டத்திற்காக வருடாந்தம் தேவைப்படும் ஏற்பாடுகள் குறைவாக மதிப்பீடு செய்தலும், மதிப்பீடு செய்யப்பட்ட தொகையும் அந்த அதிகார சபையின் ஏனைய வீடமைப்பு செயற்திட்டங்களுக்காக ஈடுபடுத்தப்பட்டமையாலும், நலன்பெறுவோரின் வீடுகள் நிர்மாணிப்பதற்காக பணம் உரிய முறையில் விடுவிக்கப்படாமையினாலும், நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் குறைந்த மட்டத்தில் காணப்படுவதற்கு காரணமாக இருந்தது. இது தொடர்பாக பல சந்தர்ப்பங்களில் வீடமைப்பு அதிகார சபையை அறிவுறுத்திய போதிலும் எதிர்பார்த்தவாறு உரிய கருமத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு முடியாமல் போனது. | வழங்கப்பட்டிருந்த கருத்து வேறுபாட்டுத் தன்மையுள்ள கடன்கள் திருப்பிப் பெற வேண்டும். |
| (ii) | அதிகார சபையின் முக்கிய செலவு விடயம் ஒன்றென அவதானிக்கப்பட்ட செயற்திட்டச் செலவுகளில் உள்ளடங்கியிருந்த பல்வேறு உப செயற்திட்டங்களுக்காக செலவிடப்படும் | பதில் அனுப்பப்படவில்லை. | உப செயற் திட்டங்களுக்காக நிச்சயிக்கப்பட்ட மற்றும் தெளிவான மதிப்பீடுகள் |

| | | |
|---|---|---|
| தொகைக்காக மதிப்பீடு தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை. இந்த நிலைமை செலவு முகாமைத்துவத்திற்கு தடையாக இருந்தது. | | தயாரிக்கப்பட வேண்டும். |

### 3.3 நிதியங்களின் குறைபயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகார சபையினால் செயற்படுத்தப்படும் விருசர அட்டைகளுக்காக பாதுகாப்பு பிரிவு, ஸ்ரீ லங்கா டெலிகொம் நிறுவனம் மற்றும் ஏனைய தனியார் நிறுவனங்களில் இருந்து 2016 ஆணடில் கிடைக்கப்பட்டிருந்த ரூபா 25,366,500 இற்கான தொகையில் ரூபா 3,607,941 தொகையொன்று 2018 திசெம்பர் 31 திகதி முதல் நான்கு வருட காலம் பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்படுகின்றது என அவதானிக்கப்பட்டது. | விருசர சலுகை அட்டையின் செல்லுபடியாகும் காலம் 5 வருடங்களாக காணப்பட்டமையால் 2017 ஆண்டில் வெளியிடப்பட்ட அட்டைகளின் செல்லுபடியாகும் காலம் 2023 ஆண்டு முடிவடைய உள்ளது. இது தொடர்பாக முகாமைத்துவ சபைக்கு தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் மொத்த அட்டைகளும் ஒரே நிறுவனத்தில் அச்சிடும் படி அறிவுரை வழங்கப்பட்டது. அதன் படி அதற்குரிய பெறுகை அலுவல்கள் நடைபெற்று வருகின்றது. | நிச்சயிக்கப்பட்ட குறிக்கோள் ஒன்றிற்காக கிடைத்திருந்த பணம் செயற்திறனுடன் அக் குறிக்கோளுக்காக ஈடுபடுத்துவதற்கு முகாமைத்துவம் செயற்படுத்த வேண்டும். |

### 3.4 விளைவற்ற மற்றும் குறை பயன்பாட்டு ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2001 ஆண்டில் அதிகார சபைக்கு நன்கொடையாக கிடைத்திருந்த 1 ஏக்கர் 1 ரூட் 9 பர்சஸிற்கான ரூபா 1,500,000 தொகைக்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த காணி ஒன்று மீளாய்வாண்டு இறுதியளவிலும் பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. | அதிகார சபையின் தலைவர் உட்பட மூன்று உத்தியோகத்தர்களினால் இக் காணியை பார்வையிட்டு அறிக்கையொன்று வழங்கி இருந்தது. இவ் அறிக்கையின் படி இந்த காணியின் மூலம் எதுவித பயனும் காணப்படவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. இக் காணி தொடர்பாக பாதுகாப்பு செயலாளரை அறிவுறுத்தி அவர் வழங்கும் அறிவுரையின் படி நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். | காணி விளைவின்றி பேணிச் செல்லாமல் பொருத்தமான விதத்தில் பயன்படுத்த வேண்டும். |

## 3.5 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகார சபையின் பதவியணி (தலைவர் மற்றும் உப தலைவர் இன்றி) 89 பேர்கள் ஆகும். 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு, உள்ளவாறான பதவியணியில் 64 சிவில் உத்தியோகத்தர்கள், 56 பாதுகாப்பு பிரிவு அங்கத்தவர்கள் என ஒட்டுமொத்த பதவியணி 120 ஆகக் காணப்பட்டமையால் மிகைப் பதவியணி 31 தொகை காணப்பட்டது. | 2020 ஆண்டு முதல் நிறுவனங்களின் அனைத்து ஆட்சேர்ப்புக்களும் இடைநிறுத்தப்பட்டிருந்தமையால் அதிகார சபையின் அலுவல்களை இடையறாமல் மற்றும் செயற்திறனுடன் நடாத்திச் செல்வதற்காக பாதுகாப்பு பிரிவுகளில் இருந்து மேலும் ஒரு தொகையினரை இணைப்பதற்கு நேரிட்டது. தற்போது அதிகார சபையின் திறமுறைத் திட்டம் (strategic Plane) தயாரிக்கும் அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அதனை தயாரித்த பின்னர் அதிகார சபைக்கு தேவையான பதவியணியை இனங்காணக் கூடியதாக இருக்கும். அதன் படி பாதுகாப்பு பிரிவு அங்கத்தவர் எந்தளவு தொகையினரை தொடர்ந்தும் அதிகார சபையில் வைத்துக் கொள்ளத் தேவைப்படும் என தீர்மானிக்கப்படும் என அறிவிக்கின்றேன். | வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது உள்ளவாறான பதவியணிக்கு பொருத்தமான விதத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |